இல்லாமல் நடத்த முடியும். அப்படி இதுவரை ஒழுங்காகச் செய்து வருகிறோம். நம்முடைய விதிமுறைகளின்படி சட்டமன்றத்தைப் பேரவைத் தலைவர் நடத்திச் செல்ல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இப்போதுள்ள பிரச்சினை திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் முதலில் ' ஒரு ஒழுங்குப் பிரச்சினை ' என்றார்கள். நான் ' எந்த விதியின் கீழ்க்கொண்டு வருகிறீர்கள் ?' என்று கேட்டேன். அப்படிக் கேட்க பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அது ' பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் ' என்றார்கள். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் தான் கொண்டுவர முடியும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லாது முதலிலேயே பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று கோரியிருந்தால் நான் அனுமதிகூட வழங்கியிருக்க முடியும். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, அது எந்த விதியின்கீழ் என்று நான் கேட்க, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொன்ன காரணத்தினால் அதற்கு நான் அனுமதி தரவில்லை என்று தீர்ப்பு அளித்துவிட்டேன். அந்தத் தீர்ப்பு சரியல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது இந்த மன்றத்தின் கண்ணியத்தையே பாதிப்பதாக இருக்கிறது. நான் தீர்ப்புக் கொடுத்துவிட்ட பிறகு அந்தப் பிரச்சினையை எழுப்பு வதற்கே யாருக்கும் உரிமை இல்லை.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தாங்கள் குறிப்பிட்டது போன்று பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றாலும் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவர முடியும்.

அதுவும் தேர்தல் என்பது—ராஜ்ய சபா தேர்தலாக இருந்தாலும், மேலவைத் தேர்தலாக இருந்தாலும் அது கட்சிகளின் பிரச்சினையே தவிர அரசின் பிரச்சினை அல்ல. தேர்தல் சம்பந்தமாகக் கட்சிகள் கலந்து கொள்கிறமுறை, கேட்டுக்கொள்கிற முறை, வோட்டு வாங்கிக்கொள்கிற முறை ஆகியவற்றுக்கெல்லாம் கட்சிகளின் தலைவர்களே பொறுப்பு விளக்கம் கொடுப்பதோ, விளக்கம் பெறுவதோ கட்சிகளுக்குடபட்ட காரியம். இந்த அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த மன்றத்திற்குள் தீரவேண்டிய பிரச்சினையும் அல்ல. பரிசீலிக்க வேண்டிய விஷயமும் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: என்னுடைய அமைச்சர், நம்முடைய அமைச்சர், தமிழக அமைச்சர், எங்களுடைய அருமை நண்பர்கள் தலைசிறந்த கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு வைத்திருப்பதை எல்லாப் பத்திரிகை செய்திகளும் வெளியிட்டிருக்கின்றன. இதுவரை அப்படி யாரும் தொடர்பு கொள்ளவில்லை என்கிற மறுப்பும் வரவில்லை. அந்தச் செய்தி ஆதாரபூர்வமானதா, ஆதாரமற்றதா என்கிற விளக்கம் கொடுக்கப் படவில்லை. இந்த அமைச்சரவையின் நன்மைக்காகவே இதுபற்றி விளக்கம் கேட்கிறோம். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே கேட்கிறோம். இதற்கு அனுமதி வழங்குவதில் தவறு என்ன இருக்கிறது?

(இ) எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்பொழுதும் தகவல் கோர உள்ள உரிமை குறித்து.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I am not questioning your ruling. I know you are a lawyer with some experience. You have given a correct ruling that nobody can raise a point of order and then turn it into a point of information. But, Sir, coming to a later stage, the Hon. the Leader of the Opposition has got a right to get up at any point of time or moment to intervene and ask for information. He was careful enough to

say that he was only asking for information. Even that you want to deny him. I am only asking the Chair to reconsider his decision. You can deny me and I am a small man. (Interruption) I am on a point of order and I have not finished it. Let the Chair give his ruling on the point of order raised by me. Sir, the Hon. the Leader of the Opposition is as good as a Cabinet Minister. We are supposed to be known as a Shadow Cabinet and the Hon. the Leader of the Opposition is on a par with the Hon. the Leader of the House and that is the position. Is there anything wrong in my thesis? That is the privilege in his favour. You can ask me and other Hon. Members to resume their seat and we are small men evidently. But as far as the point of order or point of information is concerned, that is the privilege which the Hon. the Leader of the Opposition enjoys by virtue of his position as the hon. the Leader of the Opposition. I want the Chair to give a ruling on the point of order raised by me so that at least in future nobody can deny him that privilege to raise a point of information.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித தலைவர் அவர்களுக்கு பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. திரு. விஞயகம் சொன்னது முழுமையும் ஏற்றுக்கொள்கிறேன். அதில் எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்திருந்து 'பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்' என்று கேட்டிருந்தால் நான் அனுமதி அளித்திருப்பேன். ஆனால் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கொண்டு வந்தார்கள். எந்த விதியின்கீழ் என்று கேட்டேன். அவர் உடனே பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றார்கள். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்றால் தலைவர் அனுமதியுடன் தான் கொண்டுவர முடியும். அதற்கு நான் இப்போது அனுமதி வழங்கவில்லை என்று தீர்ப்பு அளித்தேன். அது தவறு என்கிற முறையில் திரு. சௌந்தரபாண்டியனை நான் அனுமதிக்க வேண்டும் என்று சிபார்சு செய்கிற முறையில்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். நான் கொடுத்த தீர்ப்பை மாற்றிக்கொள்ள அவசியம் இல்லை என்றுதான் நான் சொன்னேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்னுடைய கட்சி உறுப்பினருக்குச் சிபார்சு செய்ய எனக்கு உரிமை இல்லையா? நான் கேட்கிறேன். சிபார்சோடு மட்டுமல்ல. இந்த 40 பேர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கே எனக்கு உரிமை உண்டு, பாதுகாப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றி வருவதில் தவறு இல்லை. அவைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் உள்ள அத்தனை உறுப்பினர்களுடைய உரிமையையும் காப்பாற்றவே இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் கூட நம்முடைய விதிப்படி அவைத் தலைவர் அவர்களுக்கு அறிவித்து அனுமதி பெற்ற பிறகே தான் பாயின்ட் ஆப் இன்பர்மேஷனும் கேட்க வேண்டும். அவைத் தலைவருக்கு அறிவிப்பு இல்லாமல் எதையும் நம்முடைய விதிகளின்படி கொண்டுவர முடியாது.

திரு. முனு ஆதி : சார் பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட பேரவைத் தலைவர் நிற்கிறபோது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் உட்காராது நின்றுகொண்டே பேசுவது முறையா? தலைவர் நிற்கிறபோதே எதிர்க்கட்சித் தலைவர் உட்காராது வீராப்பாகப் பேசுவதுதான் மரபா? இது பற்றித் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கோருகிறேன்.